அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 5/90

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 7.
1990 ஜனவரி மாதம் 17ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரசாங்க கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் அனைவருக்கும்!

நீதி உத்தியோகத்தர்கள்/அரசாங்க உத்தியோகத்தர்கள்
மற்றும் அரசாங்க கூட்டுத்தாபன பணியாளர்கள் என்போர்
களுக்கு அரசாங்க வாகனங்களின் உரிமையை வழங்குதல்

1984.08.15ஆந் திகதியிடப்பட்ட 264ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை மற்றும் 1988.02.11ஆந் திகதியிடப்பட்ட 6/88 ஆம் இலக்கச் சுற்றறிக்கை என்பவற்றின்படி கீழ்க் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு உத்தியோகபூர்வ, தனியார் போக்குவரத்துக்களைச் செய்வதற்கு உரித்துடைய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் கூட்டுத்தாபன பணியாளர்களுக்கும் அரசாங்க வாகனங்களை குறித்தொதுக்குவதற்கு 1990.01.01ஆந் திகதியிலிருந்து திட்டமொன்றைச் செயற்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(i) 5 ஆண்டுகள் முடியும் வரை குறித்தொதுக்கப்பட்ட வாகனம் அரசாங்கத்திற்கே சொந்தமாயிருக்கும், அது உரிமையானது 5 ஆண்டுகள் கழிந்த பின்பே வழங்கப்படும்.

(ii) வாகனத்தின் நேரத்தில் உத்தியோகத்தர் வாகனத்தின் பெறுமதி தேய்ந்த பின் வரும் பெறுமதியில் நூற்றுக்கு 10% வீதத்தையே செலுத்துதல் வேண்டும். வாகனத்தின் பெறுமதியானது விலை, காப்புறுதி, சுங்கக் கட்டணம் போன்ற விற்பனை வரி என்பவற்றைச் சேர்த்து கணிக்கப்படும். சுங்கக் கட்டணங்கள், சேர்க்க வேண்டிய வரி அக்கட்டணத்தை நாம் வாகனத்தை இறக்குமதி செய்கையில் செலுத்திய சுங்கக் கட்டணத்தை வைத்தே கணித்தல் வேண்டும்.

(iii) வாகனத்தைச் செலுத்துதல், சேவை நிலைப்படுத்தல் ஆகியவற்றைச் செய்யுமாறு உத்தியோகத்தர் கேட்டுக் கொள்ளப்படுவர். உத்தியோகத்தர் சாரதி ஒருவரை தமது சொந்தச் செலவில் அமர்த்திக் கொள்ளலாம். உடன்படிக்கைக் காலத்தில் திருத்துதல் மற்றும் பேணுதல் என்பவற்றின் பொருட்டு உத்தியோகத்தர்களுக்கு ஏற்படும் மொத்தச் செலவுகளில் நூற்றுக்கு 5% வீதம் அவர்களுக்குச் செலுத்தப்படும். அரசாங்கத்தின் மற்றைய வாகனங்கள் சம்பந்தமாக கடைப்பிடிப்பது போல வாகனங்கள் ஓடும் குறிப்புப் புத்தகத்தை தயாரித்து முன்னளித்தல் வேண்டும்.

(IV) [illegible] உத்தரவுச் சீட்டு, வாகனத்துக் கட்டணத்தைச் செலுத்துவதில் இருந்து [illegible] விலக்களிக்கப்படும். அரசாங்கத்தால் பிறரபாயக் காப்பு காப்புறுதி மட்டுமே வழங்கப்படும். அமைச்சு ஒன்றின் விரும்பின் வாகனங்களின் பொருட்டு கூட்டுக் காப்புறுதியையும் பெற்றுக் கொள்ளலாம்.

(V) உத்தியோகபூர்வ பயணங்களின் பொருட்டு மாதம் ஒன்றின் 22 நாட்களுக்கொரு தடவை திசைநீ சராசரியாக 60 கிலோ மைல் வீதத்தில் (அதாவது மாதமொன்றிற்கு 1320 கிலோ மீட்டர்) உத்தியோகத்தருக்கு எரிபொருள் வழங்கப்படும். உயர் எல்லை மாதமொன்றிற்கு 1500 கிலோ மீற்றர்களாக விதிக்கப்பட்டுளது. எரிபொருள்கள் உத்தியோக பூர்வ கடமைகளின் பொருட்டு தயார் செய்யப்பட்டுள்ள கட்டளைகளுக்கு மாத்திரமே வழங்கப்படும். விடுமுறை பெற்றுச் செல்லும் போது பூரணமாக அரச பொருள் கொடுப்பனவுகள் வழங்கப்படமாட்டாது, என்பதுடன் அவை விடுமுறை பெறும் நாட்களின் எண்ணிக்கை விகிதாசாரத்திற்கிணங்கவே வழங்கப்படும். 5 வருடங்கள் கழிந்து வாகனங்களை உரித்தாக்கப்பட்ட பின்பும் எவரேனும் உத்தியோகத்தர் ஒருவர் அவ்வாகனங்களை உத்தியோகபூர்வ கடமைகளுக்கு பாவிப்பின் அவர்களுக்கு இவ்வெரிபொருள் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

(VI) உத்தியோகத்தர்களுக்கு இலவசமாக 10 கலன் பெற்றோல் வழங்கப்படும். கல்வெல்லை மீறும் இடத்து தாபன விதிக்கோவையின் XIV பந்தியின் 8.2ஆம் [illegible]படும்.

(VII) உற்பத்தியாளரின் தொழிற்நுட்பக் குறைபாடு ஒன்றின் விளைவாக பெரிய பழுதுபார்த்தல் ஒன்றினை மேற்கொள்ள வேண்டிய அரிய நிகழ்வு சம்பவிக்கும் இடத்து அச்செலவுகள் உதகரவாத காலப்பகுதியில் சம்பந்தப்பட்ட கம்பனியினால் பொறுத்துக் கொள்ளப்படல் வேண்டும், இத்தேவைப்பாட்டை செயற்படுத்தும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும்.

(VIII) "செயற்பாட்டிலுள்ள" உடன்படிக்கைக் காலாவதியாகுவதற்கு முன் உத்தியோகத்தரொருவர் இ ஊப்பாறு விடுத்து வாகனத்தின் உடைமையைக் கையளிக்கு முன் அவ்வுத்தியோகத்தரிடமிருந்து அறிவிடத்தக்க விகிதசமமான தொகைகள் அட்டவணை 1இல் (இணைக்கப்பட்டுள்ளது) உள்ள தெரிவு செய்த முன்மாதிரி மாதிரிகளுக்குக் கணக்கிடப்படும். இதே முறையில் பிற வகை வாகனங்களின் தொடர்பிலும் அறவிடும் தொகை கணக்கிடுவதற்கு உபயோகிக்கப்படலாம்.

(IX) ஆகக் குறைந்த 3 ஆண்டுக்காலம் இத்திட்டத்தில் உத்தியோகத்தரொருவர் இருக்கக் கூடியதாக இத்திட்டம் 57 வயதுடைய அல்லது அதற்குக் குறைந்த வயதுடைய உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகவிருக்கும்.

( X ) நீண்டகால படிப்பு லீவில் வெளிநாடு செல்வதை எதிர்பார்க்கிற உத்தியோகத்தர்கள் இத்திட்டத்தை விரும்பித் தெரிவு செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. வருடமொன்றிற்கோ அல்லது அதற்கு மேற்பட்ட காலத்துக்கோ வாகனங்களை பாவித்த உத்தியோகத்தர் ஒருவர் படிப்பு லீவில் செல்லின் விகிதாசார முறைப்படி பெறுமதியைச் செலுத்தவோ அல்லது வாகனத்தை மறுபடி ஒப்படைத்தலோ வேண்டும். கல்விப் படிப்பு/தொழில் விடயங்களின் பொருட்டு எவரேனும் உத்தியோகத்தர் ஒருவர் சம்பளமற்ற விசேட லீவொன்றில் வெளிநாடு செல்லின் வாகனத்தை மறுபடி அரசுக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

( XI ) தற்போது இருக்கும் நிறுவனத்தில் 5 வருடங்கள் முடியும் முன்பு வேறேதும் திணைக்களத்திற்கு/அமைச்சிற்கு/இடமாற்றம் பெற்றுச் செல்லும் உத்தியோகத்தர் ஒருவர் தாம் இடமாற்றம் பெற்றுச் செல்லும் புதிய திணைக்களத்தில்/அமைச்சில் இங்கு பந்தி 1இல் காட்டப்பட்டுள்ளவாறு வாகனங்களை பாவிக்க உரிமை கொண்டிருப்பின் அவ்வாகனத்தை கொண்டு செல்ல இயலும்.

( XII ) அவசர அல்லது தூரத்துப் பிரயாணங்களை மேற்கொள்ள நேரிடும் சந்தர்ப்பங்களில் அமைச்சின் சாரதி ஒருவரின் சேவையை பெற்றுக் கொள்ள இயலும்.

( XIII ) உத்தியோக பூர்வ நோக்கங்களை தனியார் போக்குவரத்துகளின் பொருட்டு பாவித்துக் கொள்ள உரிமையுடைய பதவியொன்றில் பதில் கடமை புரியும் அல்லது இரட்டை அடிப்படையில் கடமை புரியும் உத்தியோகத்தரொருவர் இதன் பொருட்டு தகுதிபெறமாட்டார்.

( XIV ) இம்முறையினுள் தம்மை அடக்கிக் கொள்ளும் பொருட்டான விண்ணப்பங்களை இத்துடன் வரும் மாதிரிப் படிவத்திற்கிணங்க தயாரித்து வழங்குதல் வேண்டும். இதன் பிரதிகளை அவரின் ஆள் கூடு கோப்பிற்கும், அவர் கடமைபுரியும் அமைச்சிற்கும் மற்றும் தாபன பணிப்பாளர்களுக்கும் அனுப்புதல் வேண்டும்.

( XV ) உத்தியோகத்தர்களுக்கும் அமைச்சின் செயலாளர்களுக்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படல் வேண்டும். ஒப்பந்தத்தின் ஆரம்ப பிரதியை அமைச்சின் உயர் உத்தியோகத்தர் ஒருவரின் பொறுப்பில் பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும். மேலதிக பிரதிகளை தாபன பணிப்பாளருக்கும் மற்றவற்றை சேர்த்து வைக்கும் பொருட்டு அவரின் ஆள் கூடு கோப்பிற்கும் அனுப்புதல் வேண்டும்.

( XVI ) இம்முறையை 1990.02.01ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்த சகல அமைச்சுக்களின் செயலாளர்களும் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

10

(XVII) இதன் முன்னேற்றம் தொடர்பான மாதாந்த அறிக்கைகளை 1990, பெப்ருவரி மாதம் தொடக்கம் திட்டம் வரைதல், திட்டம் அமுலாக்கல் அமைச்சின் செயலாளர்களுக்கும் தாபன பணிப்பாளர்களுக்கும் அனுப்புதல் வேண்டும்.

02. அமைச்சுக்களின் செயலாளர்கள், இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள், கூட்டுத்தாபனத் தலைவர்கள் என்போர்களின் பொருட்டு தற்போது நடைமுறையிலிருக்கும் விதத்திலேயே வாகனங்கள் ஒதுக்கப்படும். எனினும் இவ்வுத்தியோகத்தரும் விரும்பின் இப் புதிய முறையில் சேரலாம்.

03. இச்சுற்று நிருபம் 1989.10.11ஆம் திகதி இல.50/89கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்று நிருபத்திற்குப் பதிலாக வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்: பி.என்.எம். பெர்னாந்து.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

(மூன்று பிரதிகளுடன் வழங்கல் வேண்டும்)

## அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 5/90இன் கீழ் விண்ணப்பி...

### உத்தியோக பூர்வ வாகனத்தின் உரிமையை வழங்குதல்

(1) அமைச்சு/திணைக்களம்/கூட்டுத்தாபனம் :-

(2) உத்தியோகத்தர்/பணியாளரின் பெயர் :-

(3) உத்தியோகத்தர்/பணியாளரின் பதவி :-

(4) பிறந்த திகதியும், வயதும் :-

(5) நிகழ்கால பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :-

(6) பதவியின் சம்பள அளவுத்திட்டம் :-

(7) உத்தியோகத்தர்/பணியாளரின் :

(I) தொழில் புரியும் இடத்தின் முகவரி :-

(II) நிரந்தர முகவரி :-

(8) உரிமை மாற்றிக் கொடுக்கப்படும் வாகனம் தொடர்பான விபரங்கள்

(I) பதிவு இல :

(II) வாகனத்தின் வகையும் :-

(III) உற்பத்தி ஆண்டு :-

(IV) என்ஜின் இல :-

(V) செசி இலக்கம் :-

(VI) பாரம் :-

(VII) பெறுமதி (விலை காப்புறுதி கப்பல் கட்டணம் சுங்கக் கட்டணம் மொத்த விற்பனை வரி) :-

(VIII) நிறுவனத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட வருடம் :-

(IX) இவ்வுத்தியோகத்தரால் பாவிக்கப்பட்ட வருடங்களின் எண்ணிக்கை :

(X) விருப்பம் தெரிவிக்கும் தருணத்தில் வேக மீட்டரில் காட்டப்பட்டுள்ள அளவு :-

இல. 5/90 கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு நான் இணங்கிறேன். இல. 5/90 கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள (வாகனத்தை கொள்ளும் பொருட்டு) நடவடிக்கைகளை தயவு செய்து மேற்கொள்ளவும்.

திகதி :- கையொப்பம் :-

## அட்டவணை - 1

உடன்படிக்கையின் காலம் முதிர்வடைவதற்குள் முடிவுறுத்தும் உத்தியோகத்தரிடமிருந்து அறவிடத்தக்க தொகை.

| வகை முஃகடா எல் 323 | ஆண்டு அறவிட்டு நூற்று வீதம் | | அறவிடத்தக்க தொகை |
|---|---|---|---|
| கொள்வனவு விலை ( வீதியில் ) ரூபா 430,000/= | 1. கொள்வனவு விலையின் | 85% | ரூபா 365,500/= |
| | 2. – do – | 67% | ரூபா 288,100/= |
| | 3. – do – | 48% | ரூபா 206,400/= |
| | 4. – do – | 29% | ரூபா 124,700/= |
| | 5. – do – | 10% | ரூபா 43,000/= |

| நிசான் சன்னி | ஆண்டு அறவிட்டு நூற்று வீதம் | | அறவிடத்தக்க தொகை |
|---|---|---|---|
| கொள்வனவு விலை ( வீதியில் ) ரூபா.550,000/= | 1. கொள்வனவு விலையின் | 85% | ரூபா 467,500/= |
| | 2. – do – | 67% | ரூபா 368,500/= |
| | 3. – do – | 48% | ரூபா 264,000/= |
| | 4. – do – | 29% | ரூபா 159,500/= |
| | 5. – do – | 10% | ரூபா 55,000/= |

| ஹைறயுன்டேல்ரால்வர் ஜிஎஸ்எல் | ஆண்டு அறவிட்டு நூற்று வீதம் | | அறவிடத்தக்க தொகை |
|---|---|---|---|
| கொள்வனவு விலை ( வீதியில் ) ரூபா 510,000/= | 1. கொள்வனவு விலையின் | 85% | ரூபா 433,500/= |
| | 2. – do – | 67% | ரூபா 341,700/= |
| | 3. – do – | 48% | ரூபா 244,800/= |
| | 4. – do – | 29% | ரூபா 147,900/= |
| | 5. – do – | 10% | ரூபா 51,000/= |